இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 106– திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 10 – திங்கள்கிழமை 25 நவம்பர் 2024 – கோவை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 106: Thiruvalluvar Year - 2055 - Karthigai 10 - Monday 25 November 2024 - Kovai 16 Pages ₹ 5.00







முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (23.11.2024) சென்னை, அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில் கழக மகளிர் அணி சார்பில் நடைபெற்ற ‘கலைஞர் 100’ வினாடி - வினா இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசு ரூ.10 லட்சத்தை வழங்கி சிறப்புரையாற்றினார். இவ்விழாவிற்கு கழக துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவில் கழக துணைப்பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் பி.கீதாஜீவன், கயல்விழி செல்வராஜ், திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு, மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### இந்திய அரசியலில் மிகப்பெரும் அடையாளமாகத் திகழ்ந்தவர் கலைஞர்: திராவிடப் பட்டாளத்தை அமைத்தவர் கலைஞர்!

# திராவிட மாடலையே உருவாக்கியவர் தலைவர் கலைஞர்!

## ‘கலைஞர் 100’ வினாடி - வினா இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் விழாவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ. 25 -**

**“இந்திய அரசியலில் மிகப்பெரும் அடையாளமாகத் திகழ்ந்தவர் கலைஞர்; திராவிடப் பட்டாளத்தை அமைத்தவர் கலைஞர்; திராவிட மாடலையே உருவாக்கியவர் தலைவர் கலைஞர்” என்றும் “2 லட்சம் பேரைத் திராவிட இயக்கத்தின் வரலாற்றைப் படிக்க வைத்து - புதிய சிந்தனையாளர்களை உருவாக்கியிருப்பதன் மூலம் இந்தப் போட்டியின் நோக்கம் நிறைவேறியிருக்கிறது!” என்றும் ‘கலைஞர் 100’ வினாடி - வினா இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் விழாவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

சென்னை - அண்ணா அறிவாலயத்தில் கழக மகளிரணி சார்பில் நடைபெற்ற ‘கலைஞர் 100’ - வினாடி - வினா போட்டி பரிசளிப்பு நிகழ்வில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

**பகுத்தறிவுப் பார்வையில் வினா எழுப்பியவர் கலைஞர்!**

திராவிட இயக்கக் கருத்துகளை இங்கு கூடியிருக்கும் இளைஞர்களின் நெஞ்சில் பதியம் போடும் வகையில் நடத்தப்பட்ட, “கலைஞர் 100 - வினாடி-வினா” போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கும் இந்த விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் உள்ளபடியே மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

தமிழ்ச் சமுதாயத்தை அடிமைப்படுத்தியவர்களையும் - தமிழினத்தின் வளர்ச்சியை எப்படியாவது தடை செய்திட வேண்டும் என்று உள்நோக்கத்துடன் இருந்தவர்களையும் நோக்கி, பகுத்தறிவுப் பார்வையில் சுயமரியாதை உணர்வுடன் வினா எழுப்பியவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். வினா எழுப்பியதோடு இல்லாமல், அரசியல் களத்தில் மறுமலர்ச்சிக்கான சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கி - தமிழ்ச் சமுதாயத்திற்கான விடியலாகவும் - முன்னேற்றத்திற்கான விடையாகவும் இருந்தார் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்!

எனவே, தலைவர் கலைஞரின் நூற்றாண்டில் வினாடி-வினா போட்டி நடத்தி, “எங்கே திராவிடப் பட்டாளம்?” என்று கேட்பவர்களுக்கு - “இதோ இங்கே!” என்று அடையாளம் காட்டியிருக்கிறார் என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி அவர்கள்!

‘கலைஞர் 100’ மட்டுமல்ல; இந்தத் தமிழ்நாடும் - தமிழினமும் ‘கலைஞர் 1000’கூட கொண்டாடும்! ஏன் என்றால், தமிழ்நாட்டில் இருக்கும் பல கோடி மக்களுக்கு ‘லைஃப்’ கொடுத்ததால்தான், கலைஞர் இன்னும் ‘லைவ்’-ஆக இருக்கிறார். தலைவர் கலைஞரின் வரிகளில் சொல்ல வேண்டும் என்றால், “ஒரு மனிதனின் வாழ்க்கை, அவனுடைய மரணத்தில் இருந்துதான் கணக்கிடப்பட வேண்டும்” என்று சொல்வார். அப்படி, நிறைந்த பிறகும், தமிழர் மனங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்!

**இந்தியாவின் அரசியல் அடையாளம் கலைஞர்!**

தலைவர் கலைஞர் அவர்கள் கட்சி எல்லைகளைக் கடந்து - அரசியல் எல்லைகளைத் தாண்டி - இன்றைக்கும் தமிழ்நாட்டின் தனிப்பெரும் தலைவராக - இந்தியாவின் அரசியல் அடையாளமாக - நிர்வாகத் திறமையின் இலக்கணமாக அனைவரும் ஒப்புக்கொள்ளும் ஒரு ஆளுமையாக உயர்ந்து நிற்கிறார்! அதை வெளிக்காட்டும் விதமாக - இந்தப் போட்டியை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் நம்முடைய கழகத் துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்றக் குழுத் தலைவர் - என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகள்!

பாசத்தைப் பொழியும்போது, கனிமொழியாகவும் - தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்ட நாடாளுமன்றத்தில் பேசும்போது, கர்ஜனை மொழியாகவும் இருக்கிறார் கனிமொழி அவர்கள். நீங்கள் அனைவரும் கனிமொழி அவர்களுடைய நாடாளுமன்றப் பேச்சுகளைப் பார்த்திருப்பீர்கள், கேட்டிருப்பீர்கள்... திராவிட இயக்கத்தின் கொள்கையை - சமூகநீதி வரலாற்றை - சுயமரியாதை சமதர்ம உணர்வுகளோடு மட்டுமல்ல, இந்திய ஜனநாயகம் காக்க இந்திய நாடாளுமன்றத்தில் வீரமங்கையாகச் செயல்பட்டு வருபவர்தான் நம்முடைய தங்கை கனிமொழி அவர்கள்.


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


### நாடாளுமன்றத்தில் வீரமங்கையாக செயல்படுபவர் கனிமொழி!



**இந்தப் போட்டியை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் நம்முடைய கழகத் துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்றக் குழுத் தலைவர் - என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகள்!**

**பாசத்தைப் பொழியும்போது, கனிமொழியாகவும் - தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்ட நாடாளுமன்றத்தில் பேசும்போது, கர்ஜனை மொழியாகவும் இருக்கிறார் கனிமொழி அவர்கள். நீங்கள் அனைவரும் கனிமொழி அவர்களுடைய நாடாளுமன்றப் பேச்சுகளைப் பார்த்திருப்பீர்கள், கேட்டிருப்பீர்கள்... திராவிட இயக்கத்தின் கொள்கையை - சமூகநீதி வரலாற்றை - சுயமரியாதை சமதர்ம உணர்வுகளோடு மட்டுமல்ல, இந்திய ஜனநாயகம் காக்க இந்திய நாடாளுமன்றத்தில் வீரமங்கையாகச் செயல்பட்டு வருபவர்தான் நம்முடைய தங்கை கனிமொழி அவர்கள்.**

### வயநாடு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர்

# பிரியங்கா காந்தி அமோக வெற்றி!



**திருவனந்தபுரம், நவ. 25 - வயநாடு மக்களவை தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் பிரியங்கா காந்தி 4 லட்சத்து 10 ஆயிரம் வாக்குகள் கூடுதலாக பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார்.**

களம் கண்ட முதல் தேர்தலிலேயே, இமாலய வெற்றியை நோக்கி முத்திரை பதிக்கும் பிரியங்காவின் சாதனையை காங்கிரஸ் கட்சியினர் கொண்டாடி வருகின்றனர்.

வயநாடு மக்களவை தொகுதிக்கு கடந்த 13ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் பிரியங்கா காந்தி களமிறங்கினார்.

இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி, காலை 8 மணிக்கு தொடங்கிய நிலையில், தொடக்கத்தில் இருந்தே பிரியங்கா காந்தி தொடர்ந்து முன்னிலை வகித்தார்.

முதல் மூன்று சுற்றுகள் முடிவில், 50 ஆயிரத்துக்கும் கூடுதலான வாக்குகளுடன் முன்னிலையில் இருந்த பிரியங்கா 7வது சுற்று முடிவில் ஒரு லட்சத்துக்கும் அதிகமாக வாக்குகள் பெற்று முன்னிலையில் இருந்தார்.

வயநாடு இடைத்தேர்தலில் பதிவான மொத்த வாக்குகளில் பிரியங்கா காந்தி 6 லட்சத்து 22 ஆயிரத்து 338 வாக்குகள் பெற்றார்.

சி.பி.ஐ. வேட்பாளர் சத்யன் 2 லட்சத்து 11 ஆயிரத்து 407 வாக்குகள் பெற்றார். பா.ஜ.க. வேட்பாளர் நவ்யா 1 லட்சத்து 9939 வாக்குகள் பெற்றார்.

இதன்மூலம், தன்னை எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளரை காட்டிலும் 4 லட்சத்துக்கும் கூடுதலான வாக்குகள் வித்தியாசத்தில் பிரியங்கா காந்தி இமாலய வெற்றியை பெற்றார்.


களம் கண்ட முதல் தேர்தலிலேயே பிரியங்கா காந்தி, வரலாற்று முத்திரையை பதித்துள்ளார். வயநாட்டில் காங்கிரஸ் கட்சியின் வரலாற்றுச் சாதனையை அக்கட்சியினர் நாடு முழுவதும் கொண்டாடி வருகின்றனர்.

டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் அக்கட்சியினர் வெடி வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

### உலக அரங்கில்

# இந்தியாவுக்குப் பெருமை சேர்த்தவர் முரசொலி மாறன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!



**சென்னை, நவ. 25-**

**ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் “உலக அரங்கில் இந்தியாவிற்குப் பெருமை சேர்த்தவர் முரசொலி மாறன் அவர்கள்” என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**டெல்லியில் கழகத்துக்கும், உலக அரங்கில் இந்தியாவுக்கும் பெருமை தேடித் தந்த பண்பின் திருவுருவம் மதிப்புக்குரிய முரசொலி மாறன் அவர்களின் நினைவுநாள் இன்று (23.11.2024)!**

**தலைவர் கலைஞர் மீது கொண்ட தூய அன்பு, ஒப்பிலா அறிவுக் கூர்மை, மாறாக் கொள்கை என எடுத்துக்காட்டாக வாழ்ந்து நிறைந்த அவரது பணிகளை நன்றியுடன் இந்நாளில் போற்றுகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.